ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1810/45 - 2013 මැයි මස 17 වැනි සිකුරාදා - 2013.05.17

*1810/45 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சிவில் விமான சேவைகள் அதிகார சபை**

*196 விமான சேவைகள் கோவையின் கீழ் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் அறிவித்தல்*

*உள்ளக தனியார் விமான சேவைகள் செயற்பாடுகள்* (Domestic, private Charter Air Service, Operations) *மற்றும் வாடகை செயற்பாடுகள் விமான போக்குவரத்து சேவைகள்* (Charter Operations) *நாட்டில் மேற்கொள்வதற்காக சிவில் விமான சேவைகள் சட்டம் மற்றும் அதற்குரிய கோவைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய விமான செயற்பாட்டு உறுதி மற்றும் வாடகை செயற்பாடுகள் விமான போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக கொழும்பு 01, உலக வர்த்தக மையத்தின் கிழக்குக் கோபுரம் 26 ஆவது மாடி/லக்வின் எவியேசன் (தனியார்) கம்பனியால் 2013, சனவரி மாதம் 30 ஆந் திகதிய விண்ணப்பப்படிவம் 2013 சனவரி மாதம் 31 ஆந் திகதி இவ் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன். விண்ணப்பப்படிவத்திற்கு அமைய வரையறுக்கப்பட்ட லக்வின் எவியேசன் (தனியார்) பணிப்பாளர் சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.*

*திரு. லக்சித வீரசிங்க,*
*திருமதி சுனாலி அபேகுணவர்தன சமரசிங்க*

*அக்கம்பனியின் உத்தேச விமான செயற்பாடுகள் தொடர்பான முழுமையான பொறுப்புக்கள் முகாமைத்துவத்திற்காக திருமதி லக்சித வீரசிங்க அவர்கள் வரையறுக்கப்பட்ட லக்வின் எவியேசன் (தனியார்) கம்பனியினால் பெயரிடப்பட்டுள்ளது.*

*விண்ணப்பதாரிகளினால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியினை கொழும்பு - 02, ஹுனுப்பிட்டிய வீதி, இல. 04 கொண்ட சிவில் விமான சேவை அதிகார சபையின் கீழ் மாடியில் அமைந்துள்ள தொழில்நுட்ப நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் வேலை நாட்களில் அலுவலக நேரத்துக்குள் பொது மக்களுக்கு பரிசீலனை செய்ய முடியும்.*

*உத்தேச செயற்பாடுகளுக்காக தேவையான விமான செயற்பாட்டு சான்றிதழ்* (Air Operator Certificate) *கூலி செயற்பாட்டு விமான அனுமதிப்பத்திரம்* (License) *உட்பட ஏனைய உரிய அங்கீகாரங்களை வழங்குவதற்கு முன்னர் சிவில் விமான சேவை சட்டம் விமானப் போக்குவரத்துக் கோவையினைப் போன்று உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரைச் செயற்பாடுகள்* (International Standard and Recommended Practices) *மற்றும் இந்நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அதனுடன் தொடர்புபட்ட உள்நாட்டுத் தேவைகளுக்கு அமைய பாதுகாப்பும் நம்பகத் தன்மையும் மிக்க விமானப் போக்குவரத்து சேவை, செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக விண்ணப்பதாரிகளின் தகைமைகளை நிலையியற் சபைச் செயற்பாடுகளுக்கு அமைய உரியவாறு பரிசீலனை செய்து இவ்விண்ணப்பப்படிவத்தினை உறுதிப்படுத்தும் வேலைத் திட்டங்கள் 2013, யூன் மாதம் 13 ஆந் திகதிக்குப் பின்னர் என்னால் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன்.*

*மேற்கூறப்பட்ட தினத்தன்று 10 நாட்களுக்கு முன்னர் எந்தவொரு நபருக்கும் மேற்கூறப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பில் எழுத்து மூலம் உரிய காரணங்களை அடிப்படையாகக் கொண்ட விடயங்கள், விமானப் போக்குவரத்து செயற்பாட்டுக் கோவைகளுக்கு அமைவாக எனக்கு அறிவிக்க முடியும். உள்ளடக்கப்பட்டுள்ள சகல வெளிப்பாடுகளினதும் உண்மைத் தன்மை எழுத்து மூலச் சாட்சியுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான விஞ்ஞாபனங்களை எனக்குச் சமர்ப்பிக்கும் வேளையில் அவரினால் அதன் பிரதியினை விண்ணப்பதாரிக்கு கிடைக்கச் செய்ய வேண்டியதுடன் அவ்வாறு அனுப்பப்பட்ட சான்றிதழை உரிய விஞ்ஞாபனத்துடன் இணைத்தல் வேண்டும்.*

*எச். எம். சீ. நிமல்சிறி,*
*சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும்*
*பிரதம நிறைவேற்று அதிகாரி.*

*சிவில் விமான சேவை அதிகார சபை,*
*இல. 04, ஹுனுப்பிட்டி வீதி,*
*கொழும்பு 02*
*2013, மே 17.*

*05-858*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.